Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ,08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி -29 16-10-2003 வியாழக்கிழமை ஓசை 240




# படையினரதும், இனத்துரோகிகளினதும் அச்சுறுத்தல்களையும் மீறி

# மன்னாரில் பேரெழுச்சியுடன் நடந்த பொங்குதமிழ் நிகழ்வு

## மூன்று முனைகளில் இருந்து பேரணிகளாக திரண்டெழுந்து வந்த மக்கள் கூட்டம்

(மன்னார்)

**சிறிலங்காப் படையினரதும் தமிழ் இனத்துரோகிகளினதும் எச்சரிக்கை, அச்சுறுத்தல்களையும் மீறி நேற்று மாலை மன்னாரில் பொங்குதமிழ் நிகழ்வு பேரெழுச்சியுடன் நடைபெற்றது.**

**மும்முனைகளிலிருந்து பேரணியாக தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படங்களைத் தாங்கிச் சென்ற மக்கள் மன்னார் நகரிலுள்ள பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்ததையடுத்து அங்கு நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.**

நேற்று அதிகாலை முதல் பொங்குதமிழ் நிகழ்வைக் குழப்பும் நடவடிக்கையில் சிறிலங்காப் படையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாகவும், படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி. தேசவிரோதிகளும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை நேற்று முன்தினம் முதல் மன்னாரில் சகல பகுதி களிலும் விநியோகித்திருந்தனர்.

அத்துடன் மக்கள் குடியிருப்புகளின் வாசல்களில் இத் துண்டுப் பிரசுரங்களை போட்டும் இருந்தனர்.

இவ்வாறான சிறிலங்காப் படையினரின் அச்சுறுத்தல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் நேற்று மாலை 3.30 மணியளவில் மன்னார் பேருந்த நிலையம், மன்னார் செபஸ்ரியார் தேவாலயம்,

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை-புலிகள் சந்திப்பில் திருக்கோவில் வைத்தியசாலை படை முகாமை அகற்ற இணக்கம்

(அம்பாறை)

அம்பாறையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்று அக்கரைப்பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் இரு மணித்தியாலங்கள் நடைபெற்றது.

மாவட்ட போர் நிறுத்துக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் சார்பில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் ஆறு பேரும் அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை அத்தியட்சகர் உபுல் செனவிரட்ண தலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாம்பழம் சந்தியில் மற்றுமொரு விபத்து மோ.சைக்கிள்-ராணுவ பிக்கப் மோதல்

யாழ்.கண்டி வீதியின் மாம்பழம் சந்திப்பகுதியில் மற்றுமோர் வாகன விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. மாலை 6.15 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் பிரதான வீதியூடாக வந்த இராணுவ பிக்கப் வாகனமொன்றும், கிளை வீதியூடாக வந்த பிரதான வீதியில் ஏறமுற்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றுமே மோதிக்கொண்டன.

சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் சிறுகாயங்களிற்கு உள்ளாகினர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு வாழ்க்கையைக் கட்டி எழுப்ப வசதியாக போதிய பலம் பொருந்திய இ.கா.அரசு வேண்டும்!

### மன்னார் பொங்கு தமிழ் நிகழ்வில் பிரகடனம்

(மன்னார்)

"நமது இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வசதியில்லாமல் போதிய பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று வேண்டும்" என நேற்று மன்னார் நகரில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வில் பிரகடனப்படுத்தப்பட்டது.

மன்னார் பொங்கு தமிழ் நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனம் வருமாறு, இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்தாகி 20 மாதங்கள் முடிவடைகின்றன. காலம் கடந்து போயுள்ளது. நமது இயல்பு வாழ்க்கை இழுத்தடிக்கப்பட்டுப் பேச்சுவார்த்தை இடைநின்று போயிற்று. யுத்த மேகம் எம்மீது திணிக்கப்படுகின்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலைமையைத் தமிழ் மக்களாகிய நாம் மாற்ற விரும்புகின்றோம். அந்த நோக்குடனேயே மன்னாரின் மூலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## காவலரணை இடித்தது பேருந்து இரு படையினர் படுகாயம்

### - நெல்லியடி நகரில் சம்பவம்

(வல்வை)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் சிக்கிப் படையினர் இருவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த காவலரணைப் பொதுமக்கள் பயணித்த மினிபஸ் ஒன்று மோதியதாலேயே இவ்விருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு இருவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகையில் சில வருடங்களுக்கு முன்னர் தாக்குதலை மேற்கொண்ட நபர்களில் இரண்டு பேர்நந்து கண்டி மேல் நீதி மன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதியரசர் டி.எஸ்.பி. காஸம் மூன்றாவது மற்றும் நான்காவது பிரதிவாதிகளான முத்துசாமிபிள்ளை தர்மலிங்கம், கிருஸ்ணசாமி ராமச்சந்திரா ஆகியோருக்கு இம் மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இரண்டாவது பிரதிவாதியான முத்துலிங்கம் ஜீவராஜ் குற்றவாளி அல்ல என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்காத முதலாவது பிரதிவாதி ரவீந்திர சுப்பிரமணியத்திற்கு 20 வருட கால சிறைத் தண்டனையும் அவரை கைது செய்வதற்காக பிடி ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட இருவரும் போகம்பர சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட வேண்டுமென நீதியரசர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏற்றுக்கொள்ளக் கூடிய இ.நிர்வாகம் உருவாக்கப்படுதலில் முன்னேற்றம் வேண்டும்

### - கொழும்பில் கனேடிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் ஈடுபடவேண்டுமானால், பொருத்தமான சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுவதிலும் முன்னேற்றம் காணப்பட வேண்டியது அவசியமாகும். என கொழும்பிற்கு விஜயம் செய்துள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிறஹெம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளின் முக்கியமான கட்டத்தில், சமாதானத்திற்கான கனடாவின் தொடர்ச்சியான தீவிர ஆதரவைத் தெரிவிப்பதற்கென நான் இங்கு வந்துள்ளேன்.பிரதம மந்திரி, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீம், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், பாராளுமன்ற மற்றும் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை இன்று நான் சந்தித்துள்ளேன். எதிர்கால நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை ஆக்கத்தில் கிளி.மகாவித்.மாணவி முதலிடம்

(அலுவலக செய்தியாளர்)

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டி சிறுகதை ஆக்கத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவி முதலிடத்தினைப் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி மகாவித் தியாலய 10 ஆம் ஆண்டு மாணவியான செல்வி பசுபதிப்பிள்ளை நிருத் திகா என்பவரே அகில இலங்கை ரீதியில் நடாத் தப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டியில் பிரிவு 4 சிறுகதை ஆக் கத்தில் முதலாமிடத்



தினைப் பெற்றுக்கொண்டவராவார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு முயற்சிக்கு இந்தியா ஆதரவு வழங்கும்

### - இந். அமைச்சர் ஜஸ்வந்சிங்கா

(திருமலை)

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு சனநாயக வழி மூலமும் மனித உரிமை பேணப்படும் சூழலிலும் பல்லின சமூகங்கள் வாழும் நாடு இலங்கை என்ற அடிப்படையிலும் அரசியல் தீர்வு காணப்படுவதற்கு எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்திய அரசு தனது பூரண ஆதரவை வழங்கும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தனை தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடும்போதே வெளியுறவு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாயன்று மாலை இந்திய தூதரகம் இந்திய வெளியுற அமைச்சரும் விருந்துபசாரம் ஒன்றை அளித்தபோது அதில் கலந்து கொண்டபோதே இருவரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சம்பந்தன் கருத்து தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சவார்த்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல், பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் போன்றன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு:- பரந்தன்வீதி, புதுக்குடியிருப்பு. (3713)


## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பெற்று வரும் உணவு சமைத்தல் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்குக் கிளிநொச்சி கல்விவள நிலையத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. எனவே மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தலைவர் கஇரத்தினகுமார் வேண்டியுள்ளார். (சோ)

## உணவுமுத்திரைகளை பெற்றுக்கொள்க!

உணவு முத்திரைகளைப் பெறத் தவறியவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் குறிக்கப்பட்ட நாட்களில் உரிய ஆவணங்களுடன் சமுகம் கொடுத்து உணவுமுத்திரைகளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டியுள்ளார்.

இதன் பிரகாரம் நாளை கந்தபுரத்திலுள்ள கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையில் வைத்து, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், கந்தபுரம், கண்ணகைபுரம், கோணாவில், ஊற்றுப்புலம் மக்களுக்கும், எதிர்வரும் 20ஆம் திகதியன்று கிளிநகரம் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் கரைச்சிப்பிரதேச செயலகத்தில் வைத்து உணவு முத்திரைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் உணவுமுத்திரையினை பெறத்தவறியவர்கள் தவறாது அன்றைய தினங்களில் சமுகம் கொடுத்து உணவுமுத்திரையினைப் பெற்றுச் செல்லும் வண்ணம் பிரதேச செயலர் வேண்டியுள்ளார். (சோ)

## இராணுவ சாரதிகளுக்கு மீண்டும் பயிற்சி

யாழ்.குடாநாட்டில் கடமையாற்றும் ராணுவ வாகனச் சாரதிகளுக்கு ஓட்டுநர் பயிற்சி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட ராணுவ பொலிசார் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலமாக குடாநாட்டில் நிகழ்ந்துவரும் தொடர்ச்சியான ராணுவ வாகன விபத்துக்கள் மக்கள் பலரைக் கொன்றும் காயப்படுத்தியும் உள்ள நிலையில் மக்கள் அச்சமடைந்துள்ளதைத் தொடர்ந்து இந் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ராணுவத் தலைமையகம் தமக்கு உத்தரவிட்டுள்ளதாக ராணுவ பொலிசார் தெரிவித்துள்ளனர். (33)

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் துணுக்காயில் இருவர் காயம்

(மல்லாவி)

துணுக்காய் ஆலங்குளம் வேட்டை அடைப்பைச் சேர்ந்த பரராசசிங்கம் செந்தீபன்(வயது-26) என்பவர் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு அருகில் உள்ள கடைக்குச் சென்ற போது இனந்தெரியாதோரின் கத்திக் குத்துக்கு இலக்கானார்.

மேற்படி முகவரியைக் கொண்ட சுப்பையா செல்வகுமார் என்பவரும் தலையில் பலத்த அடிகாயங்களுக்கு உள்ளாகி இருவரும் அயலவரின் உதவியுடன் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கத்திக் குத்துக்கு உள்ளான ப.செந்தீபன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு உடன் அனுப்பிவைக்கப்பட்டார். இச்சம்பவம் அறிந்த துணுக்காய் காவல் பணிமனையினர் உடன் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (24)

# வவுனிக்குளம் அணைக்கட்டில் பார ஊர்திகள் செல்லத் தடை

(மல்லாவி)

வவுனிக்குளம் அணைக்கட்டினைப் பாதுகாக்கும் முகமாக இவ் அணைக்கட்டுப் பாதை பார ஊர்திகளின் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. தடையினை எதிர்வரும் 27.10.2003இல் இருந்து மழைகாலம் முடிவடையும்வரை அமுலில் இருக்கும் என்றும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நீர்ப்பாசன பொறியியலாளர் பா.தனநாயகம் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார். (24)

# முன்னேற்றத்தைக் காட்டாத தேசிய பாடசாலைகள் தரம் குறைக்கப்படும்

## -அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகள் தமது முன்னேற்றத்தை வெளிக்காட்டாத சந்தர்ப்பத்தில் அவற்றைத் தரம் குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நாட்டில் 326 தேசிய பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் பதுளையில் மாத்திரம் 30 தேசிய பாடசாலைகள் இருக்கின்றன. எனினும் இவற்றில் பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற தரத்தில் தமது நடவடிக்கைகளை முன்கொணரவில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை ஈட்டும் பாடசாலைகள் தரமுயர்த்தப்படும் என்று கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்

நாடு முழுவதும் உள்ள 10,000 பாடசாலைகளிற்கு ஒரேயளவிலான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் கல்வி செயற்பாட்டுத் திறனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சாதாரண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தர முயர்த்துவதற்கு, இனம் காணும் பொருட்டுத் தேசிய பாடசாலைகள் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறிய அவர், பாடசாலைகளின் பாடசாலைப் பெறுபேறுகள் உட்பட அவற்றின் நடவடிக்கைகள் உட்படச் சகலதையும் இந்தத் தேசியக்குழு மதிப் பீடு செய்யும் என்று கூறியுள்ளார். கொழும்பு டிஎஸ்ஸாஸ் கல்லூரியில் நேற்று முன்தினம் வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட கல்வியமைச்சர் அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

# இல. பல்கலை ஆராய்ச்சிக்கு சுவீடன் 110 கோடி ரூபா உதவி

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக 110 கோடி ரூபாவை சுவீடன் ஆராய்ச்சி ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு சுவீடன் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நிதியுதவியின் கீழ் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளில் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்துதல், ஆராய்ச்சிப் பயிற்சிகள் உட்படப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் கடந்த திங்கட்கிழமை நிதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, கொழும்பிலுள்ள சுவீடன் தூதரக நிர்வாகத் தலைமை அதிகாரி என்-மாரிட்ளேனியஸ் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

# மாத்தறை வர்த்தகரிடம் 10 இல.ரூபா கொள்ளை

(கொழும்பு)

மாத்தறை திஹகொடப் பகுதியில் நேற்று முன்தினம் சம்பத் வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட 10 இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகர் ஒருவர் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துச் சென்ற வேளை, வெள்ளை வானில் வந்த 04 பேர், வர்த்தகரின் வாகனத்தை இடைமறித்து, தாக்குதல் நடத்தி, பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வர்த்தகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொள்ளையர்கள் மாத்தறைப் பக்கம் தப்பிச் சென்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதையடுத்துப் பொலிஸார் தேடுதல் நடத்தி வருகின்றார்கள்.

## கண்டெடுப்பு

13-10-2003 திங்கள் முற்பகல் பூநகரி ப.நோ.கூ.சங்கத்திற்குச் சென்ற போது சங்க நுழை வாசலில் ரூபா இரண்டாயிரம் கண்டெடுக்கப்பட்டு சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து உரித்துடையோர் பெற்றுக்கொள்ளவும்.


### "தமிழீழ வைப்பகம்"

உங்கள் நிறைவே எங்கள் மகிழ்ச்சியே உங்கள் மகிழ்ச்சியே எங்கள் நிறைவு

**உலக சேமிப்பு தினத்தை முன்னிட்டு.....**

மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் நடமாடும் வங்கிச் சேவையினை,

* பூநகரி
* ஒட்டுசுட்டான் பிரதேசங்களில்

**18-10-2003, 25-10-2003** நாட்களில் நடாத்துகின்றது

உங்களுக்காகவே உங்கள் ஊரில்
விரும்பிப் பணி செய்யக் காத்திருக்கின்றோம்.
இவ் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி
கணக்கொன்றை ஆரம்பித்து உங்களையும்
"தமிழீழ வைப்பகத்துடன்"
இணைத்துக் கொள்ளுங்கள்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-8656)



கிளி/உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வர சிவாலயம்

### சிவதீட்சை வைபவம்

எதிர்வரும் 20.10.2003 திங்கட்கிழமை பகல்11 மணிக்கு சிவதீட்சை நிகழ்வு நடைபெறவுள்ளது. தீட்சை பெறவிரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

இவ்வண்ணம்
ஆலயபரிபாலன சபை. உருத்திரபுரம்.

(3105)



கடந்த 50 வருடங்களிற்கு மேலாக தங்களின் வீடுகளிற்கு உரமூட்டிய தரமான சீமெந்தை வழங்கிய காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் தரம் நன்கு பரிசீலிக்கப்பட்டு பொதிசெய்யப்பட்டு SLS மற்றும் அரச அங்கீகார முத்திரைகளுடன் எமக்கே உரித்தான

### "காங்கேசன் சீமெந்து"

என்ற விற்பனைக் குறியீட்டுடன் மீண்டும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.




தொடர்புகட்கு-இல 37 யாழ்சாலை,கிளிநொச்சி.




பொலிவிய சனாதிபதி தமது இயற்கைவாயு உற்பத்திகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யத் தடை விதித்துள்ளதைக் கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டம்.

### தாக்குதல்

காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் ஐயர் நேற்று முன்தினம் இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

நாகபட்டினத்தில் நடைபெற்ற அரச நலத்திட்ட விழாவில் கலந்து கொண்ட மணிசங்கர் ஐயர் மாலை வீடு திரும்பும் போது காரைக்கால் பகுதியில் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மணிசங்கர் ஐயர் விழாவில் தெரிவித்த கருத்துகளுக்கு ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளதை அடுத்தே அந்தத் தாக்குதல் நடந்ததாகக் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.




பாக்தாத்தில் துருக்கி தூதுவராலயத்தின் நுழைவாயிலில் நடந்த வாகனக் குண்டு வெடிப்பையடுத்து அங்கு தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ள அமெரிக்கப் படைகள். (குண்டு வெடிப்பில் சாரதியும், மேலும் இருவரும் பலியாகினர்)

# மத்திய அரசு சாதனைகளை வெளியிட இந்தியத் தேர்தல் ஆணையகம் தடைவிதிப்பு

## தேர்தல் அறிவிப்பு வெளியானதே காரணம்

(புதுடில்லி)

**டில்லி ராஜஸ்தான் உள்ளிட்ட 05 மாநிலங்களில் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் மத்தியரசு தனது நான்காண்டு சாதனைகளை வெளியிட்டுள்ளதைத் தேர்தல் ஆணையகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.**

டில்லி, மிசோரா, ராஜஸ்தான், சத்திஸ்கார், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கான தேர்தல் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையிலேயே மத்தியரசு தனது நான்காண்டு சாதனைகள் என விளம்பரம் வெளியிட்டு வருவதாக தேர்தல் ஆணையகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அரசின் சாதனை விளம்பரத்தை செய்தித்தாள்களிலோ, தொலைக்காட்சிகளிலோ வெளியிட வேண்டாமென்று மத்திய அமைச்சரவைச் செயலாளருக்கும், செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சக செயலருக்கும் தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

இவ்வாறு சாதனை விளம்பரங்களை வெளியிடுவது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயலாகும் என்றும் தேர்தல் ஆணையம் கண்டித்துள்ளது.

### வெடிவிபத்து

குஜராத் மாநிலம் பாலூஜ்ஜிலுள்ள நர்மதா உரக் கழக தொழிற்சாலையில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட வெடிவிபத்தில் 04 பேர் உயிரிழந்துள்ளார்கள். 17 பேர் காயமடைந்துள்ளார்கள். தொழிற்சாலையில் நைட்ரஜன் பிரிவில் நேற்று முன்தினம் இரவு இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

# இராணுவச்செயற்பாடு காஷ்மீரில் குறையாது

## இந்திய இராணுவத் தளபதி

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்பும் இராணுவமும் பயங்கரவாத நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக இந்திய இராணுவத் தளபதி குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த மாதத்தில் மட்டும் 28 ஊடுருவல்கள் முறியடிக்கப்பட்டதாகவும், இதில் 290 பயங்கரவாதிகளைக் கொன்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில், காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் குறைக்கப்படமாட்டாது என்றும் அவ்வேளை திட்டவட்டமாகக் கூறினார்.

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பை புஷ் கோருவார்


(வாஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆசிய நாடுகளின் தலைவர்களின் உறுதியான ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் புஷ் இவ்வாரம் ஆசியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டுறவு உச்சி மாநாட்டின் போது இதற்கான ஒத்துழைப்பைப் பெறும் முயற்சிகளில் புஷ் ஈடுபடுவாரென கூறப்படுகின்றது.

இதேவேளை பொருளாதார மேம்பாட்டு விடயங்கள் வடகொரியாவில் அணுத்திட்டம், போருக்குப் பிந்திய காலப்பகுதியில் ஈராக்கை மீளக் கட்டியெழுப்புவது போன்ற விடயங்கள் குறித்தும் ஆசிய தலைவர்களுடன் புஷ் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஆசிய நாடுகளுக்கான தனது விஜயத்தை இன்று ஆரம்பித்து முதலில் ஜப்பான் செல்லவுள்ளார். பின்னர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாடுகளில் சனாதிபதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஹம்பேர்க் துறைமுக தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்ட 12 அடி நீளமான திமிங்கலம்

# ரஷ்யாவிடமிருந்து விமானந்தாங்கிக் கப்பல் இந்திய கடற்படையை மேம்படுத்த நடவடிக்கை

(புதுடில்லி)

இந்திய கடற்படையை மேம்படுத்துவதற்காக ரஷ்யாவிலிருந்து விமானம் தாங்கி போர்க கப்பல் வாங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

ரஷ்யாவுக்கு அரசு முறைப் பயணமாக பிரதமர் வாஜ்பாய் அடுத்த மாதம் செல்லவுள்ளார். அப்போது இந்திய இராணுவத்துக்கு தேவையான அதிநவீன கருவிகளை வாங்குவது குறித்து ரஷ்ய சனாதிபதி புட்டினுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்நிலையில் நேற்று முந்தினம் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்பு அமைசசர்,

இந்திய கடற்படைக்கு அதிநவீன வசதிகள் கொண்ட விமானம் தாங்கிப் போர்க்கப்பல் ரஷ்யாவிடமிருந்து வாங்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.


இந்தக் கப்பலை ரஷ்யாவிடம வாங்குவதற்கான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது என்றும் பிரதமரின் ரஷ்யப் பயணத்தின் போது இதற்கான முடிவு எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.



பயிற்சியிலீடுபடும் தாய்வான் படையினர் அமெரிக்கத் தயாரிப்பு ஏவுகணையைச் செலுத்துகின்றனர்.

### அமெ.குற்றச்சாட்டு

பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள அல்அக்தார் மன்றம் என்ற கருணை இல்லம் பயங்கரவாத அமைப்புக்களுககு நிதியுதவி வழஙகிவருவதாக அமெரிக்க திறைசேரி குற்றம் சாட்டியுள்ளது. இம் மன்றம் அல்ஹைதா இயக்கத்திற்கு நிதியுதவி வழங்கிவருவதுடன் ஈராக் கில் தாக்குதல்களை நடத்துவதற்கு நிதி திரட்டி வருவதாக அமெரிக்க திறைசேரி மேலும் குற்றம் சாட்டியுள்ளது. இம் மன்றத்தை மூடிவிடுவதன மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்குவதைத் தடுத்து நிறுத்த முடியுமென திறைசேரி செயலாளர் கூறியுள்ளார். அத்துடன் இம் மன்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டி அம்மன்றத்தின் பெயரிலுள்ள சொத்துக்களை முடக்க வேண்டுமென அவர் மேலும கூறியுள்ளார்.



இஸ்ரேலும் பலஸ்தீனமும் ஆரம்ப அமைதிப் பேச்சுக்காக 50 பக்க அறிக்கை தயாரித்துள்ள நிலையில் யூத மதத் தலைவர் ஜெருசலேமின புராதன நகரிலுள்ள தேவாலயத்தில் வழிபாடு செய்கிறார்.

# சிறுவர் இல்ல விளையாட்டுப் போட்டியில் குருகுலம் சிறுவர் இல்லத்திற்கு 8 பதக்கங்கள்

வட-கிழக்கு மாகாண மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையில் சமூக நலத்துறை



திணைக்களத்தினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப் பட்ட விளையாட்டுப் போட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் குருகுலம் சிறுவர் இல்லம் மூன்று தங்கப் பதக்கங்களையும் மூன்று வெள்ளிப்பதங்கங்களையும் இரண்டு வெண்கலப்பதங்கங்களையும் பெற்றுள்ளது.

திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் கடந்த பதினோராம் திகதி நடைபெற்ற மேற்படிப் போட்டியில் வட-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 49 பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்கள் பங்குபற்றின. இவற்றில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் குருகுலம் சிறுவர் இல்லம், பாரதி சிறுவர் இல்லம், காந்தி நிலையம் ஆகிய சிறுவர் இல்லங்கள் பங்குபற்றின.

இவற்றில் 15 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் குருகுலம் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி வே. திவ்வியவதனி முதலாம் இடத்தைப் பெற்று இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றதுடன் உயரம் பாய்தல் போட்டியில் மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்று மூன்று பதக்கங்களையும் பெற்றார்.

அடுத்து 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தட்டெறிதல் போட்டியில் கலந்து செல்வி ச. செல்வகுமாரி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டதுடன், குண்டெறிதல் மற்றும் உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளிலும் பங்குகொண்டு இரண்டாமிடத்தைப் பெற்று இரண்டு வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

15 வயதுக்குட்பட்ட பிரிவில் நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாமிடத்தைப்பெற்று செல்வி செ. ஜிம்சி வெள்ளிப்பதக்கத்தையும்.17 வயதுக்குட்பட்ட பிரிவில் குண்டெறிதல் போட்டியில் பங்குபற்றி மூன்றாமிடத்தைப் பெற்ற செல்வி த. தனுசஜந்தி வெண்கலப் பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

மேற்படி போட்டியில் குருகுலம் சிறுவர் இல்லம் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருதை வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் சு. சிவதாசன் வழங்கி கௌரவித்தார்.

மேற்படி போட்டியில் பங்குபற்றிய சிறுவர் இல்லங்களில் மிகவும் சிறந்த சிறுவர் இல்லமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தும் குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லம் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சிறுவர் இல்லத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.

மேற்படி விருதை வட-கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களப் பணிப்பாளர் திருமதி என். ஆர். ரஞ்சினி வழங்கிக் கௌரவித்துள்ளார். (லோ)



# பரு.துறைமுக ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கலில் தாமதம்

## வேலை நிறுத்தத்தில் குதிக்க முடிவு

பருத்தித்துறை இறங்குதுறையின் பணியாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கான ஊதியக் கொடுப்பனவில் காட்டப்படும் தாமதங்களினால் துறைமுகப் பணிகள் விரைவில் ஸ்தம்பித்துப் போகலாமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாக யாழ். செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்த பருத்தித்துறை இறங்குதுறை கடந்த ஜூலை முதல் துறைமுக அதிகார சபையால் கையேற்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொழும்பை மையமாகக் கொண்டே பருத்தித்துறை இறங்குதுறையின் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் குறித்த இறங்குதுறையில் கப்பல்களில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இத்தொழிலாளர்களுக்கான கூலியான சுமார் 1.7 மில்லியன் ரூபா நிதி கடந்த மூன்று மாத காலமாகியும் வந்தடையவில்லை.

இதேவேளை, எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக தங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக துறைமுக தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் இருந்து பொருட்களை இறக்குதல், அவற்றை கரைக்கு எடுத்துவருதல் மற்றும் அவற்றை இறங்குதுறையில் இறக்குதல் ஆகிய நடவடிக்கைகளில் நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இறங்குதுறை, துறைமுக அதிகார சபையினால் கையேற்கப்பட்ட பின்னரும் கூட குறிப்பிடத்தக்கதான எந்தவோர் அபிவிருத்தி நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (27)

# வவுனியாவில் மாபெரும் சிறுவர் அரங்கவிழா

வவுனியா மாவட்ட சிறுவர்கள் பங்குபற்றும் மாபெரும் சிறுவர் அரங்கவிழா வவுனியாவில் நடைபெறவுள்ளது.நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ள இம் மாபெரும் சிறுவர் அரங்கவிழாவில் வவுனியா மாவட்ட சிறுவர்களின் அரங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விழாவின் இறுதியில் சிறுவர் அரங்கில் பங்குபற்றிய மாணவர்களையும், நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(10)

# சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் விழிப்புணர்வுப்பட்டறை

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வவுனியாவில் விழிப்புணர்வுப் பட்டறையொன்றினை நடாத்த உள்ளது.சிறுவர் பாதுகாப்பு நிறுவனமானது வவுனியாவில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், குடும்பங்களுடன் தொடர்புடைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு உளநலம் சம்பந்தமான பயிற்சியினை வழங்கிவருகிறது. இப்பயிற்சியின் ஒரு பகுதியாக வவுனியாவிலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை இணைத்து விழிப்பு ணர்வுபட்டறையொன்றினை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் விழிப்புணர்வுப் பயிற்சி வழங்குநர்களால் நடாத் தப்பட உள்ள விழிப்புணர்வுப் பட்டறை எதிர்வரும் 17ஆம்,18ஆம் திகதிகளில் வவுனியா தெற்கு கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(10)

# இந்திய இழுவைப்படகுகளால் பேசாலை மீனவரின் வலைகள் நாசம்

(மன்னார்)

பேசாலை - சிறுதோப்பு மீனவர்களின் வலைகள் நேற்று இந்திய ரோளர்களால் நாசமாக்கப் பட்டுள்ளதாக மீனவர்கள் மன்னார் மீனவர் சங்கத்தில் முறையிட்டுள்ளனர்.

சில நாட்களாக இப்பகுதி கடலுக்கு இந்திய ரோளர்கள் வராதிருந்தபோதும் நேற்று இரவு நான்கு இந்திய ரோளர்கள் வந்து தமது வலைகளை நாசப்படுத்தியுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (மி)

# மதுப்பிரியர்களிடையே தகராறு கைகலப்பில் முடிந்தது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் பி.ப 3.10 மணியளவில், மதுப்பிரியர்களுக்கிடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டது.

மேலும் இது பற்றித் தெரிய வருவதாவது: மதுபான விற்பனை நிலையத்தில் மது அருந்தியசிலரிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்பாக மாறியது. இதன் போது கணேசன் தியாகராஜா (வயது 38) என்பவர் தலையிலும் கை கால்களிலும் காயமடைந்தார்.

கைகலப்புத் தகராறு தொடர்பான தகவல் கிடைத்தவுடன் வட்டக்கச்சிப் பிரதேச தமிழீழ காவல்துறையினர் அவ்விடத்திற்கு விரைந்து சென்று சந்தேக நபர்களைத் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அன்றைய தினம் பல மதுப்பிரியர்கள் மது போதையை அருந்திவிட்டு பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையம் முன்பாக பாதசாரிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தினர். இதனால் வீதியால் சென்ற பெண்கள் உட்பட பலர் அவ் வீதியால் பிரயாணம் செய்யும் போது பதற்ற நிலையில் காணப்பட்டனர். (12)

# தெற்காசிய நாடுகளில் இலங்கை உயர்வான வாழ்க்கை வீதத்தைக் கொண்டுள்ளது

## ஐ.நா.சபையின் சனத்தொகை அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளில் இலங்கை அதியுயர்வான வாழ்க்கை வீதத்தைக் கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை அறிக்கை கூறியுள்ளது.

இவ்வறிக்கையில் ஆண்களின் ஆயுட்காலம் 70 வருடங்கள், பெண்களின் ஆயுட்காலம் 76 வருடங்கள் என்றும், பிறப்பு வீதம் ஆயிரத்துக்கு 20 ஆகவும் காணப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் பெண்கள் தாய்மையடையும் வயது பதினைந்திற்கும் பத்தொன்பதிற்கும் இடைப்பட்டதாகவும் காணப்படுவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விண்ணப்பிக்க கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

சிறந்த கால் நடை வளர்ப்போருக்கான போட்டி-2003 ல் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள போட்டியாளர்கள் கலந்து கொள்வதற்கு கிளிநொச்சி பூநகரி கால்நடை வைத்தியர் பிரிவிலுள்ள பண்ணையாளர்கள் அவ்வவ் கால்நடை வைத்தியர் பணிமனையில் விண்ணப்பங்களைப் பெற்று அவற்றினைப் பூர்த்தி செய்து 17.10.2003 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

# தேவார திருவாசக போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

நவராத்திரி விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினரால் கடந்த 3ஆம் திகதியன்று தேவார திருவாசக. பஞ்சபுராணம் ஓதும் போட்டியில் முதல மூன்றுஇடங்களையும் பெற்ற மாணவர்களினதும் பாடசாலையினதும் பெயர் விபரம் பின்வருமாறு.

கீழ்ப்பிரிவு

1ம் இடம்.இ.கீர்த்தனா (கனகபுரம் ம.வி). 2ம் இடம் க.தாரணி (கிளி/இந்துக்கல்லூரி),3ம் இடம் ச.வேனிலவன் (கிளி/புனித திரோசா பெண்கள் கல்லூரி)

மத்தியபிரிவு

1ம் இடம் கு.ஏர்பவித்திரா (கிளி/கிளிநொச்சி ம.வி)2ம் இடம் நா.தர்மினி (கனகபுரம் ம.வி), 3ம் இடம் அ.மதுரா (கனகபுரம் ம.வி)

மேற்பிரிவு

1ம் இடம் செ.சுபாஸ்ரிகா (கிளி/கிளிநொச்சி ம.வி).2ம் இடம் ந.மொழிச்செல்வி (கனகபுரம் ம.வி).3ம் இடம் த.சர்மிளா (கிளி/மத்தியகல்லூரி) (சோ)

# தற்போதைய சமாதான முயற்சிகளால் நாட்டிற்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

**இலங்கையில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளினால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தாம் விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்க விருப்பதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகல்ல சிறி புத்திர சித்திர மகாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பௌத்த மத வைபவமொன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் கடிதமொன்றை விரைவில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனாதிபதியையும் பிரதமரையும் உடனடியாக கண்டிக்கு வரவழைத்து இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தத் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மல்வத்த சங்க சபையுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள விருப்பதாகவும், தவறினால் தமக்கு நாடொன்று இல்லாமல் போய்விடும் என்றும் எச்சரித்துள்ளார். இது தொடர்பாக ஜே.வி.பி. முன்னெடுத்துள்ள நடவடிக்கையையிட்டு அவர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

# சமாதானப் பேச்சின் மூலமே இனப்பிரச்சினைத் தீர்வு இரு பிரதான கட்சிகளும் ஏற்பதே பெரும் வெற்றியாகும்

## சிங்கப்பூரில் சனாதிபதி சந்திரிகா

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது யுத்தத்தினாலன்றி சமாதானப் பேச்சுக்கள் மூலமே என்பதை இரு பிரதான கட்சிகளும் ஏற்றுக்கொள்வது பெரும் வெற்றியே என சிங்கப்பூரில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார மாநாட்டுக்காக சிறிலங்காவின் உயர்மட்ட வர்த்தக குழுவினருடன் அங்கு சென்றுள்ள சனாதிபதி சிங்கப்பூர் பிரதம மந்திரியுடன் உரையாடும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வுரையாடலின்போது பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதம், போதைப்பொருள் பாவனை பற்றியும் விவாதிக்கப்பட்டது

சிறிலங்காவின் சமாதான நடவடிக்கைகளின் வரலாற்றை ஆழமாக விபரித்த சந்திரிகா சமாதானத்தை எட்டுவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் பின்னர் அந்நாட்டு சனாதிபதி ஒழுங்கு செய்த இராப்போசனத்திலும் கலந்து கொண்டார். இவ் வேளையில் இரு நாட்டிலும் பௌத்த சமயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டதுடன் இரு நாட்டு பாதுகாப்பு, முதலீடுகள், பொருளியல் என்பன பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

சிங்கப்பூரில் கிழக்காசிய அபிவிருத்தி ஒத்துழைப்பு மாநாட்டில் நேற்று முன்தினம் தெற்காசியாவின் பயங்கரவாதம் தொடர்பாக உரையாற்றிய பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் யுத்தம் இல்லாமை சமாதானம் என அர்த்தமாகாது தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக சமர்ப்பிக்கப் போகும் யோசனை எது என்பது இதுவரை தெரியவில்லை. இடைக்கால நிர்வாகம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் யோசனையை சமர்ப்பிக்க விருப்பதைக் கொண்டு அவர்கள் தனிநாட்டுக்கொள்கையை விலக்கிக் கொள்வார்கள் என்றோ அல்லது ஆயுதங்களை விலக்கிக்கொள்வார்கள் என்றோ அர்த்தம் கொள்ள முடியாது எனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார். பயங்கரவாத பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்களை தீர்த்து வைப்பதன் மூலம் அந்த பிரச்சினை முழுமையாக தீர்த்து வைக்க முடியும் எனவும் சந்திரிகா தெரிவித்தார். (32)

# சுசந்திகாவும் கணவரும் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கவும் அவரது கணவர் தம்மிக்க நந்தகுமாரும் தலா 25,000 ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 2ஆம் திகதி ராஜகிரியவில் இராணுவச்சிப்பாயைத் தாக்கிய குற்றச்சாட்டு இவர்கள் மீது நீதிமன்றத்தில் சுமத்தப்பட்டிருந்தும் எனினும் இருவரும் மன்றில் ஆஜராவதை தவிர்த்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இருவரும் மாளிகாகந்தை மன்றில் சரணடைந்தனர். நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காமை தொடர்பில் நீதவான் இவர்கள் இருவரையும் எச்சரித்தார். நீதி அனைவருக்கும் பொதுவானது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து இருவரும் தலா 25ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

# வவுனியாவில் மூன்று நாட்கள் தமிழ் இலக்கிய பெருவிழா

(செட்டிகுளம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவலர், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சும் வவுனியா மாவட்டச் செயலகமும் இணைந்து நடாத்தும் தமிழ் இலக்கிய பெரு விழா நாளை கோலாகலமாக வவுனியாவில் நடைபெறவுள்ளது.

17,18,19ஆகிய மூன்று நாட்கள் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

ஊர்வலம், ஆய்வரங்கு, கையெழுத்துச் சஞ்சிகை கண்காட்சி, நூல் வெளியீடு (ஈழத்து இதழியலின் வரலாறும், மதிப்பீடும்) கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு, இலக்கிய விருது வழங்கல் 2003, ஆளுநர் விருது வழங்கல், கலை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளது.

ஊர்வலம் நாளை மாலை 3.30 மணிக்கு வவுனியா மத்திய மகாவித்தியாலய முன்றலில் ஆரம்பமாகி கண்டி வீதி, மணிக்கூட்டுச் சந்தி, கடை வீதி ஊடாக றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தைச் சென்றடையும். முதல் நாள் காலை நிகழ்வாக ஆய்வரங்கும், மாலை நாதஸ்வரச் சக்கரவத்தி என். கே. பத்மநாதன் அரங்கில் சீ. ஏ. மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வவுனியா அரச அதிபர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் காலை நிகழ்வு ஆய்வரங்கும், மாலை மாவீரர் பண்டாரவன்னியன் அரங்கில் திரு. எஸ். மகாலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். இதில் முதன்மை விருந்தினராக ஆர். தியாகலிங்கம் கலந்து கொள்வார்.

மூன்றாம் நாள் நிகழ்வில் காலை ஆய்வரங்கும், மாலை கலாசூரி, இ. சிவகுருநாதன் அரங்கில் நடைபெறும் நிகழ்வுக்கு ஆர். தியாகலிங்கம் தலைமை தாங்குவார். முதன்மை விருந்தினராக எஸ். ரங்கராஜா கலந்து கொள்வார். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். அத்துடன் இறுதி நாள் நிகழ்வில் ஆளுநர் விருது வழங்கப்படும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் இருந்து வருகின்றவர்களும் கலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர் என வவுனியா செயலகம் தெரிவிக்கின்றது. (21)

# சிங்கராசவனம், சிகிரியாவை குத்தகைக்கு விடுவதற்கு எதிராக பிக்குமார் முன்னணி போராட்டம்

(கொழும்பு)

தேசிய சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் குத்தகைக்கு விடுவதை ஆட்சேபித்து தேசிய பிக்குமார் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தியது. கல்மல்வில சந்திராலோக தேரர் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் சிகிரியா மற்றும் சிங்கராசவனம் போன்றவற்றை அரசாங்கம் குத்தகைக்குக் கொடுக்கும் நடவடிக்கைக்கு எதிராகக் கோஷம் எழுப்பப்பட்டது. (32)

## இராணுவ வாகன விபத்துக் குறித்து

# இராணுவத் தளபதியுடன் ம.உ.ஆணைக்குழு பேசும்

யாழ். குடாநாட்டில் அண் மைக் காலமாக அதிகரித்துள்ள இராணுவ வாகன விபத்துகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைப் பீடமும் கவனத்தில் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் இருந்து யாழ் அலுவலகத்தினால் பெறப்பட்ட வாக்கு மூலங்கள் தலைமை அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இராணுவத் தளபதி லயனல் பலகல்லவுடன் ஆணைக்குழுவின் தலைவி பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

# பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்ந்தும் இழுபறி நிலை

பொலிஸ்மா அதிபரின் வெற்றிடம் அனுபவம் தொடர்பான பிரச்சினை காரணமாகத் தொடர்ந்தும் நிரப்பப்படாமல் இருந்து வருகிறது.

நேற்று பொலிஸ்மா அதிபர் ரி. ஈ. ஆனந்தராஜா ஓய்வுபெற்றதை அடுத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவை பொலிஸ்மா அதிபராக நியமிக்க அரசியல் நிர்ணய சபைக்குப் பரிந்துரை செய்தார். எனினும் இவர் ஏனையமூன்று உதவி சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களான காமினி ரந்தெனிய, சந்திராபெர்ணாந்து, ஜயதிஸ்ஸ பீரிஸ் ஆகியோரைக் காட்டிலும் அனுபவம் குறைந்தவர் என அரசியல் நிர்ணய சபை தெரிவித்துள்ளது. (32)

# பாதாள உலகக் குழுவினர் தப்பிச்செல்ல குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் உதவி

சுமார் 100 குற்றங்களுக்கு மேல் புரிந்த பிரபல பாதாள உலகக் குழுக்களின் முக்கிய ஐந்து தலைவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு சட்டவிரோதமான கடவுச் சீட்டுகளைத் தயாரித்துக் கொடுப்பதில் குடிவரவுக் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்ததாக சமாதான நீதவான் ஒருவர் பொலிசில் சாட்சியம் அளித்துள்ளார். இதனையடுத்து விசாரணைகள் தொடர்கின்றன. (32)

# இராணுவத்தினரைக் கண்டித்து ஆட்டோ சாரதிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் நடவடிக்கையையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் போக்கையும் கண்டித்து யாழ். குடாநாட்டில் ஆட்டோ சாரதிகள் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாம்பழம் சந்திப்பகுதியில் ஆட்டோ மீது இராணுவ பவள் வாகனம் மோதியது வேண்டுமென்று செய்யப்பட்ட ஒன்றாகும். அத்தோடு இந்த விபத்து குறித்து விசாரணை நடத்திய இராணுவப் பொலிசார் ஆட்டோ சாரதியை மிரட்டி குற்றத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய முற்பட்டுள்ளார். இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்டிப்பதோடு இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் நடவடிக்கை எடுக்காதுள்ளது குறித்தும் ஆட்டோ சாரதிகள் கண்டனம் செய்துள்ளனர். (33)

# 215 நாட்கள் உண்ணாவிரதம் நேற்றுமுடிவுக்குவந்தது

வடமத்திய மாகாணவேலையற்ற பட்டதாரிகள் கடந்த 215 நாட்களாக மேற்கொண்டுவந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்துள்ளது. இவர்களில் 136 பேருக்கு எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதிக்கு முன்னர் வேலைவாய்ப்பை வழங்குவதற்கு வடமத்திய மாகாண ஆளுநர் உறுதி அளித்ததை அடுத்தே இந்த உண்ணாவிரதம் முடிவுக்கு வந்துள்ளது. (32)

# எலிகளால் பரவும் ஒருவகை நோய் 1448 பேருக்கு தொற்றியுள்ளது

## எச்சரிக்கையுடன் இருக்குமாறு நிபுணர் நிகால் அபயசிங்க அறிவிப்பு

எலியினால் பரவும் ஒரு வகை நோய் பல மாவட்டங்களில் பரவியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1448 ஆகும். அத்தனகல்ல, மீதிகம பிரதேசங்களில் 207 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு, கடுகல பிரதேசங்களில் 252 பேரும், பண்டாரகம கொரண பகுதிகளில் 232 பேரும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் தடுப்பு நிபுணரான டாக்டர் நிகால் அபயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். இந்நோய் எலிகளால் மட்டுமன்றி ஆடுகள், மாடுகள், நாய்கள் போன்ற கால் நடைகளின் ஊடாகவும் பரவுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விலங்குகளின் சிறுநீரில் காணப்படும் நுண்ணியிர்கள் கலந்த நீரின் ஊடாகவும் இந்நோய் தொற்றுகின்றது. எனவே வயல் வெளிகள், பாசன கால்வாய்கள் என்பனவற்றிற்கு அருகே வேலை செய்வோர் கவனமாக இருக்க வேண்டுமென சுகாதார அமைச்சு ஆலோசனை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

திருகோணமலையில் மூன்று இனங்களையும் சேர்ந்த 60 முன்பள்ளி ஆசிரியர்கள் உலக ஆசிரியர் தினத்தன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கௌரவிக்கப்பட்டனர். மூதூர் பிரதேசத்திலும் 45 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். பின்தங்கிய கிராமத்தில் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களாகவே உள்ளனர்.

# வவுனியா கல்வியியற் கல்லூரியில் கற்பித்தல் சாதனைக் கண்காட்சி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்றல் கற்பித்தல் சாதனைக் கண்காட்சி இன்று நடைபெறுகிறது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி கல்லூரி ஆசிரியர்ப் பயிலுநர்களால் ஆக்கப்பட்ட கற்றல்-கற்பித்தல் சாதனங்கள் இக் கண்காட்சியில் வைக்கப்பட உள்ளன.

இன்று வியாழக்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற உள்ள இக்கண்காட்சி நிகழ்விற்கு பீடாதிபதி திரு.க.பேர்ணாட் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் வவுனியா தெற்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.கணேசபாதம் அவர்கள் கண்காட்சி நிகழ்வை ஆரம்பித்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# சிறிபாத கல்வியியற் கல்லூரி சிங்கள மாணவருக்குரியது

## - அமைச்சர் ராதா கிருஸ்ணன் தெரிவிப்பு

சிறிபாத கல்வியியல் கல்லூரி தமிழ் மாணவர்களுக்கு மட்டுமல்ல சிங்கள மாணவர்களுக்கும் உரித்தானது என மத்திய மாகாண கல்வி அமைச்சர் வேலுசாமி ராதா கிருஸ்ணன் அண்மையில் நடந்த ஆசிரியர்கள் கூட்டத்தில் கூறினார்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இக்கல்வி கல்லூரியைத் திறக்கும் காலத்தில் கல்வியமைச்சராக இருந்தார் என மாகாண அமைச்சர் குறிப்பிட்டார்.

25வீதமான சிங்கள மாணவர்கள் இதில் கல்விகற்கின்றனர். கல்லூரியில் எல்லா மாணவர்களும் தொடர்ந்து ஒற்றுமையாக படிப்பை மேற்கொள்வதாக அமைச்சர் ராதா கிருஸ்ணன் தெரிவித்தார்.

# அமைதியை நிலைநாட்ட பாடுபடும் புலிகளுக்கு நாங்கள் பூரண ஆதரவு

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் அபிவிருத்திசெய்வதற்கு வறிய மக்களுக்கு உதவிகள் புரிவதுடன், நாட்டில் அமைதியை நிலைநாட்டபாடுபடும் விடுதலைப்புலிகளுக்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வாசு தேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டில் யுத்தம் இருக்கும் வரை ஜனநாளத்தைக் கட்டியெழுப்பமுடியாது.யுத்தத்திற்கு செலவிடப்படும் பணம் இந்த நாட்டில் உள்ளபெரும் பணக்காரர் கள், அமைச்சர்களின் பணம் அல்ல. இது வறிய மக்களின் இரத்தத்திலிருந்து பெறப்படுகிறது. அனுரா பண்டார நாயக்க, மங்கள சமரவீர போன்றவர்கள் ஜே.வி.பி.யினரை சேர்த்துக் கொண்டு சடிக்கும் நாடகம் எமக்கு தேவைப்படாது இன்றுமக்களுக்குத் தேவைப்படுவது நாட்டின் சமாதானம். இந்த சமாதானத்தைப் பெறுவதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பாடுபடுவோம் எனக் கூறியுள்ளார்.

# பணி நிலை வேண்டுகை

வருவாய்ப் பகுதியின் ஆளுகையிலுள்ள புளியங்குளம், கிளிநொச்சி, வட்டக்கண்டல், பளை ஆகிய பகுதிகளிலுள்ள செயலகப் பணிக்குக் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தங்களது தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2003-10-20ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**பணிநிலைகள்:**

| | | |
|---|---|---|
| 01. ஆளுகை மேலாளர் | 02. உள்ளகக் கணக்காய்வாளர் | 03. கணக்குப் பதிவாளர் |
| 04. எழுதுநர் | 05. வெளிக்களப் பணியாளர் | 06. வரி அறவீட்டாளர் |

**கல்வித் தகைமை**

*பணிநிலை 01. பணிநிலை 02.*

ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு அல்லது உயர் தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த. (உ/த) உடன் ஐந்தாண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

*பணிநிலை 03. பணிநிலை 04.*

க.பொ.த. (உ/த) அல்லது க.பொ.த. (சா/த) உடன் மூன்றாண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

*பணிநிலை 05. பணிநிலை 06.*

க.பொ.த. (சா/த) அல்லது ஓராண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

**வேண்டுகைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

அலுவலர்,
மனிதவளமேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப் பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

நாள் : 2003 – 10 – 26
நேரம் : காலை 09.00 மணி,
இடம் : வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ். சாலை, பளை.

நாள் : 2003 – 10 – 23
நேரம் : காலை 09.00 மணி,
இடம் : வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ்.சாலை, கிளிநொச்சி.

குறிப்பு : நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,**
**வருவாய்ப் பகுதி.**

(சி-8654)

# மு/பாரதி வித்தியாலயம்

## வள்ளுவர்புரம், விசுவமடு

## வெள்ளிவிழாவும், பரிசளிப்பு விழாவும்

## அழைப்பிதழ் – 2003

காலம்– 2003–10–16 (வியாழன்), இடம்– வித்தியாலய முன்றல்
நேரம்– பி.ப. 4.00மணி



M/BHARATHY VIDYALAYAM
SILVER JUBILEE
1978-2003

# வெள்ளி விழாக்காணும் பாரதி வித்தியாலயம்

## வள்ளுவர்புரம்,விசுவமடு 1978 – 2003

முல்லை. மாவட்டத்தில் விசுவமடு வள்ளுவர்புரக்கிராமத்தில் 1978.01.09.இல் வணபிதா எட்மன் மைக்கல் அவர்களால் அடித்தளம் இடப்பட்ட இவ்வித்தியாலயம் அதிபர் திரு.தி. லூக்காஸ் தலைமையில் மூன்று ஆசிரியர்களுடனும், 152 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. 1981.03.26 இல் அரசபாடசாலையாக்கப்பட்டு மு/வள்ளுவர்புரம் அ.த.க பாடசாலை என்ற முத்தான பெயரைச் சூட்டிக்கொண்டது. கல்வி வளர்ச்சியில் மெல்ல மெல்ல தளிர்நடையிட்டு 1986இல் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தம்மாணவர்களை அனுமதிக்க வழிவகை செய்தது. மு/வள்ளுவர்புரம் அ.த.க பாடசாலை என நாமம் பெற்று விளங்கிய இவ் வித்தியாலயத்தின் பெயர் 1991.09.20 இல் மு/பாரதி வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1995ஆம் ஆண்டு புலப் பெயர்வினால் கல்வியை இழந்து ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்த மாணவரையும் வரவேற்று, கல்வியை வழங்கி நின்றது. இவ்வேளை மாணவர் தொகை 1052 ஆகவும் ஆசிரியர் தொகையும் இணைப்புப் பெற்று அதிகரித்தது. 1999,2000,2001,2002 இல் நடாத்தப் பட்ட புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த சா/தரப் பரீட்சையிலும் நிறைவான புள்ளிகளைப் பெற்று தன் புகழை நிலை நாட்டியது பெருமைக்குரிய விடயமாகும்.

கல்வியில் மாத்திரமன்றி, ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் போட்டிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றியீட்டி வருகின்றனர். இந்த வகையில் போதைப் பொருள் தடுப்புப் பற்றிய நாடளாவிய போட்டித் தொடர் 2003இல் கனிஷ்ட பிரிவில் கட்டுரைப்போட்டியில் 1ம், 2ம் இடமும், அதே பிரிவில் சிறுகதைப் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. 2001 ஆம் ஆண்டு "தகவல்" என்னும் பெயர் தாங்கி வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகையும், 2002 ஆம் ஆண்டு "துலங்கல்" என்னும் பெயர் தாங்கி வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகையும் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை இவர்களது திறமைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

2003ஆம் ஆண்டில் 769 மாணவர்களையும் 29 நிரந்தர ஆசிரியர்களையும், 08 தொண்டர் ஆசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர் ஒருவரையும் தன்னகத்தே கொண்டு, கல்வி வானில் சுடர் பரப்பி வருகின்றது. கல்வி வளர்ச்சியின் அதி உயர் நிலையில் 01.05. 2002இல் க.பொ.த (உ/த) கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதோடு பாடசாலையின் தரம் 1c ஆக உயர்த்தப்பட்டது. இந்த நிலைக்கு பெரும் உந்து சக்தியாகவும், உரமாகவும் விளங்கியவர்கள் இதுவரை கடமையாற்றிய, கடமையாற்றுகின்ற அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களுமே என்று கூறின் மிகையாகாது.

கல்வியின் கலங்கரை விளக்காக மிளிரும் இவ் வித்தியாலயம் 25வது அகவையை நிறைவு செய்து 16.10.2003இல் வெள்ளி விழாவை இனிதே கொண்டாடுகிறது. எதிர்வரும் காலங்களில் ஏற்றங்களும், மாற்றங்களும் பெற்று கல்வி உலகில் சரித்திரம் படைத்து நிற்கும் என்பது வெளிப்படையாகும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்*

"நன்றி"

*அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்*
*பா.அ.சங்கம், ப.மா.சங்கம்*
*மு/பாரதி வித்தியாலயம், வள்ளுவர்புரம்,விசுவமடு.*

(3103)



**சிந்தனைக்கு...**

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொது சனங்களே.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-10-2003

## அச்சுறுத்தும் நடவடிக்கை!

போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி 20 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னமும் இயல்பு வாழ்க்கை என்பது திரும்பப் பெறவில்லை. இதனைத் தமிழர் தரப்பு மட்டுமல்ல, புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் சர்வதேச அமைப்புக்கள்கூட இன்று ஊர்ஜிதம் செய்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்வு தொடர்பான எதிர்பார்ப்புக்கள் இன்னமும் நிறைவேறவில்லை என இவ் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

புரிந்துணர்வு உடன்பாடு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றவேளையிலும், இத்தகையதொரு நிலை நீடிப்பதற்கு சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு பாதுகாப்பு என்ற போர்வையில் தமது மேலாதிக்க நிலையை – அதாவது, மக்கள் மீதான அடக்குமுறை மனோபாவத்தைக் கைவிடத் தயாராக இல்லாமையே காரணமாகும்.

யுத்த நிறுத்த காலம் நீடித்துக் கொண்டு செல்லினும், ஆயுதப் படைத்தரப்பின் கெடுபிடிகள் குறைவடையாமல் இருப்பது மட்டுமல்ல, வேறொரு வழியில் அழுத்தங்களை, அச்சுறுத்தல்களை மக்கள் மீது திணிக்க முற்பட்டு நிற்பதையுமே காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக் காட்டாக, யாழ். குடாநாட்டில் அண்மையில் வீதி விபத்துக்கள் என்ற ரீதியில் இராணுவ வாகனங்கள் மேற்கொண்ட மோதல்கள் இவற்றிற்கு உதாரணமாக சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

யாழ். குடாநாட்டில், பத்துத் தினங்களுக்குள் வீதி விபத்து என்ற ரீதியில் நான்கு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இருவர் பலியாகியுள்ளதோடு பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவற்றில் ஆயுதப் படைத்தரப்பு நடந்து கொண்ட விதமானது தெளிவாகவே அவர்களின் அடக்குமுறை மனோபாவத்தையும், சட்டம், ஒழுங்கிற்கு எந்த நிலையிலும் தாம் மதிப்பளிக்கத் தேவையில்லை என்ற அராஜகப் போக்கையுமே வெளிப்படுத்துவ தாய் இருந்தது.

யாழ்.மடத்தடிச் சந்தியில் முதல் நடந்த சம்பவமானது சிலவேளைகளில் விபத்தாகக்கூட இருக்கலாம். ஆனால், விபத்தின்பின்னர் ஆயுதப் படைத்தரப்பு நடந்து கொண்ட விதமானது, அவர்களின் சட்டம், ஒழுங்கிற்கு அப்பாற்பட்ட அடாவடித்தனத்தையும், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை மனோநிலையையுமே வெளிப்படுத்துவதாய் இருந்தன. அதாவது, விபத்தின் பின்னர் சட்டம், ஒழுங்கை மீறும் செயலிலும் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட விதத்திலுமே நடந்து கொண்டனர்.

ஆகையினால், முதலாவது விபத்தின் பின்னரான அடுத்த விபத்துக்கள் ஆயுதப் படைத்தரப்பால் வேண்டுமென்றே நடத்தப்பட்டனவையாகக் கொள்ளக்கூடியவையாகும். ஏனெனில், அடுத்த சம்பவங்களின்போது மக்கள் மீது எவ்வாறு அடக்குமுறையைப் பிரயோகிப்பது என்பது தொடர்பாக ஆயுதப் படைத்தரப்பு ஏற்கனவே திட்டமிட்டிருந்தது– அதாவது தயார் நிலையில் இருந்துள்ளதையே சம்பவங்கள் வெளிக்காட்டுவதாய் இருந்தன.

அதிலும் குறிப்பாக, மாம்பழம் சந்திக்கு அருகில் நடந்த சம்பவம் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டதாகக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிரம்பவே உண்டு. இச்சம்பவத்திற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பின் அவர்களை ஒடுக்குவதற்கான ஏற்பாடுகளை இராணுவம் விரைந்து மேற்கொண்டதிலிருந்தே இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், ஆயுதப் படைத்தரப்பு மக்கள் மீது இவ்வாறான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டமைக்கு தனியாக இச்சம்பவங்களின்போது மக்கள் காட்டிய எதிர்ப்பு மட்டும்தான் காரணம் என்பதல்ல. புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் மக்கள் தமது உரிமைக்காக வெளிப்படுத்திய எதிர்ப்புணர்வுகள் படைத் தரப்பிற்கு ஆத்திரமூட்டும் சம்பவங்களாகவே இருந்து வந்தன. இதனால், தமிழ் மக்கள் தம்மீதான அச்சத்தை இழந்து வருவதாகவே அவர்கள் கருதினர்.

குறிப்பாக, பொங்குதமிழ் நிகழ்வுகள், உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக் குடியேற நடாத்தும் போராட்டங்கள், இராணுவத்தின் நேரடி, மறைமுக அச்சுறுத்தல்களையும் மீறி புலிக்கொடி ஏற்றும் விவகாரத்தில் விடுதலைப்புலிகளின் பின்னால் மக்கள் அணி திரள்வது, விடுதலைப்புலிகளின் நிகழ்வுகளில் – குறிப்பாக மாவீரர்களின் நினைவு நாட்களில் பங்கேற்பது போன்றவை ஆயுதப் படைத் தரப்பிற்கு ஆத்திரமூட்டும் சம்பவங்களாவே இருந்துள்ளன.

அது மட்டுமல்ல, மக்களின் உணர்வுகளுடன் கூடித் தமிழ் ஊடகவியலாளர்களும் நடந்து கொண்டமை அவர்கள் மீதும் பெரும் விசனத்தையும், ஆத்திரத்தையும் ஆயுதப் படைத் தரப்பிற்கு ஏற்படுத்தியிருந்தன. இந்நிலையில், தமிழ் மக்களுடன் சேர்த்து ஊடகவியலாளர்கள் மீதான ஆத்திரத்தையும் தீர்த்துக் கொள்ளுதல் என்ற நிலைப்பாட்டுடன் ஆயுதப் படைத்தரப்பு செயற்பட்டது என்றே கூறலாம். பெரும்பாலான ஒடுக்குமுறைச் சம்பவங்களின்போதும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதனை இதற்கு எடுத்துக் காட்டாகச் சுட்டிக்காட்டமுடியும்.

ஆகையினால், தமது மேலாண்மையையும் – அடக்குமுறையையும் தம் மீதான அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கானதொரு சூழ்நிலையையும் உருவாக்குவதற்கு ஆயுதப் படைத்தரப்பு முனைப்புடன் செயற்பட்டே வந்தது எனலாம். இந்நிலையில்தான், விபத்து என்ற ரீதியில் உருவாக்கப்படும் சம்பவங்கள் மூலம் மக்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் தமது அடக்குமுறைகளை அது கட்டவிழ்த்துவிட்டுள்ளது. ஆயுதப் படைத்தரப்பின் இந்நடவடிக்கைகள் தமிழ் மக்களை அச்சுறுத்தும் செயலே ஆகும். ஆயுதப் படைத்தரப்பில் இம்மனோநிலை தொடருமானால் புரிந்துணர்வு உடன்பாடு என்பது எத்தனை தூரம் முன்னேற்றம் காணும் என்பது கேள்விக்குரியதொன்றே.

# இனிமேல் போராட்டம் நடத்தினால் கொலை செய்து புதைப்போம்

## அரியாலையில் இராணுவம் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, கொழும்புத்துறை, நாயன்மார்க்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் வீடுவீடாகத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இராணுவத்திற்கெதிராக மக்கள் யாரும் இனிமேல் போராட்டம் செய்தால் கொலை செய்து புதைத்து விடுவோம் என வீடுவீடாகத் தேடுதல் நடத்திய படையினர் வீடுகளிலிருந்த பொதுமக்களை மிரட்டியுள்ளனர்.

அரியாலை மக்கள் இராணுவத்தினர் தம்மீது புரியும் அடாவடித்தனங்களைக் கண்டித்தும் தமது வீடுகளிலிருந்து இராணுவம் வெளியேறி குடியிருக்க அனுமதிக்க வேண்டுமெனக் கோரியும் இரு தடவைகள் இராணுவத்திற்கெதிராக வீதிமறியல் போராட்டங்களை நடத்தியும் மகஜர்கள் கையளித்திருந்ததும் தெரிந்ததே. (33)

# இலங்கைக்கு மேலும் 600கோடிரூபா நிதியுதவி வழங்க இந்தியா முடிவு

(புதுடில்லி)

இலங்கையின் புனரமைப்புக்கு மேலும் 600கோடி ரூபாவை வழங்கவுள்ளதாக இந்தியா கூறியுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் தமிழர் பகுதிகளைச் சீரமைக்க இலங்கை மதிப்பில்மேலும் 600கோடி ரூபாவை நிதியுதவியாக வழங்கவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறையமைச்சர் ஜஸ்வந்த் சிங்கா கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை இந்திய கூட்டுக்குழு ஆணையகக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக புறப்படுவதற்கு முன்னர் சென்னை விமான நிலையத்தில் இதனை செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கை இந்திய கூட்டுக்குழு ஆணைய கூட்டத்தின் போது, தமிழக மீனவர்கள் சிறிலங்கா மீனவர்களால் தாக்கப்படுவது விவாதிக்கப்படும் என்றும், கூறியுள்ளார். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைக்க சிறிலங்கா அரசுக்கு இந்தியா 700 கோடி ரூபாவை நிதியுதவியாக இதுவரை வழங்கியுள்ளதாகவும், மேலும் 600 கோடி ரூபா நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# இறக்குமதித்தீர்வையை முற்றாக நீக்க சிறீலங்கா அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதியில் இறக்குமதிகள் மீதான 20வீதமான இறக்குமதித் தீர்வையை முற்றாக நீக்கி விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று மத்தியவங்கி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள் உட்பட துவிச்சக்கர வண்டி, வானொலி, தொலைக்காட்சி போன்ற பொருட்களின் இறக்குமதிச் செலவீனம் குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கிப் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் ஏ.ஜி.கருணாசேன கூறியுள்ளார்.

2001 ஆம் ஆண்டில் அமுலான 40 வீத இறக்குமதித்தீர்வை 2002 ஆம் ஆண்டு 20 வீதமாகக் குறைக்கப்பட்டது. உதாரணமாக காரின் உதிரிபாகங்கள இறக்குமதி செய்யப்பட்டு,காரை உற்பத்தி செய்வது, காரை இறக்கு மதி செய்வதிலும் பார்க்க மலிவானது என்று தெரிவிக்கப்பட்டது.

# கோப்பாய் தரவைப்பகுதியில் படையினர் மேலும் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் - தரவை இராணுவ முகாமில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு அம்முகாம் பலப்படுத்தப் படுகிறது.

இம்முகாமில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மண் அணைகள் மேலும் உயர்த்தப்பட்டு புதிதாக மரக்குற்றிகள போடப்பட்டு மண் மூடைகள் அடுக்கப்பட்டு புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (33)

# ஹம்பகா நீதிபதிக்கு கொலைமிரட்டல் நீதிமன்றம் இருமணி நேரம் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

ஹம்பகா நீதிமன்ற பிரதம நீதவானைக் கொலை செய்யப் போவதாக வந்த அநாமதேய தொலைபேசிச் செய்தியினால் ஹம்பகா நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இரண்டு மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது. நீதிமன்ற செயலாளருக்குக் கிடைக்கப்பெற்ற இச்செய்தியை அடுத்துப் பிரதம நீதிபதி நீதிமன்றத்தை ஒத்தி வைத்துச் சென்றார். இதனையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தலைமையில் வந்த பொலிசார் மக்களையும்,நீதிமன்ற வளவையும் பாரிய சோதனை மேற்கொண்டதன் பின்னர் நீதிமன்றம் வழமை போன்று நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

# பாக்.கிரிக்கெட் அணிக்கு புதிய தலைவர் யார்?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குப் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய அணித் தலைவர் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை. தென்னாபிரிக்காவுடனான கடைசி இரு ஒருநாள் போட்டிகளையும் இவர் தவறவிட்டமை தெரிந்ததே.

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகின்ற வேளையில் அணிக்குத் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இதுவரை தலைவராக இருந்த ரஷீட் லத்தீப் தலைமைப் பதவியிலிருந்து விலகியதையடுத்துக் கடந்த மாதம் இன்சமாம் உல்-ஹக் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது அவர் காயம் காரணமாக இப்போட்டித் தொடரிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

எனினும் தெரிவுக் குழுவினரும் கிரிக்கெட் சபை அதிகாரிகளும் விரும்பினால் இத்தொடரிலிருந்து விலகுவது பற்றி மறுபரிசீலனை செய்யலாம் என ரஷீட் லத்திப் தெரிவித்துள்ளார்.

இன்சமாம்,லத்தீப், யுகானா ஆகியோர் அணியின் சிரேஷ்ட வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### -மகளிர் டென்னிஸ் தரவரிசையில்-

# முதல் நிலை வீராங்கனையாக கிளிட்டர்ஸ்

ஜேர்மனியில் நடந்த பீல்டர்ஸ்டட் கிராண்ட் பிரி.டென்னிஸ் தொடரில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிட்டர்ஸ் சாம்பியன் ஆனார்.

கடந்த ஞாயிறன்று நடந்த இறுதிப் போட்டியில் சகநாட்டவரான ஜஸ்ரின் ஹெனினை 5:7,6:4,6:2, வீதத்தில் கிளிட்டர்ஸ் வென்றார்.

இதன்மூலம் மகளிர் டென்னிஸ் தர வரிசையில் முதல் நிலை வீராங்கனை என்ற புகழைத் தக்கவைத்துக் கொண்டார் கிளிட்டர்ஸ்.

இரண்டாம் நிலை வீராங்கனையாக ஜஸ்ரின் ஹெனின் இப்போட்டியில் வெற்றிபெற்றிருந்தால், அவரே உலகின் முதல் நிலை வீராங்கனையாகத் தெரிவாகியிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு வீராங்கனைகளும் இவ்வருடம் எட்டுத்தடவை மோதி உள்ளனர். இவ்விருவரும் தலா நான்கு தடவைகள் வெற்றி பெற்றனர்.

ஆனால் பிரஞ்சு, அமெரிக்க பகிரங்கத் தொடர்களின் இறுதிப் போட்டியில் கிளிட்டர்சை ஹெனின் தோற்கடித்துச் சாம்பியன் ஆனார்.

# இந்.கப்டன் கங்குலிக்கு சிறிய அறுவைச் சிகிச்சை

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலிக்கு விலாப்பகுதியில் சிறிய கட்டி ஏற்பட்டதையடுத்து நேற்று முன்தினம் அவருக்கு சிறிய அளவிலான அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பஞ்சாப் மாநிலத்தின் மொஹாலியில் இன்று தொடங்கவுள்ளது. இதற்காக அணித் தலைவர் கங்குலி உட்பட இந்திய வீரர்கள் அங்கு சென்றிருந்தார்கள்.

இந்நிலையில் தீவிர பயிற்சியில் வீரர்கள் ஈடுபட்ட போது விலா எலும்பில் கங்குலிக்கு வலி ஏற்பட்டதையடுத்து, உடனடியாக பஞ்சாப் மாநில வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவரது விலாப் பகுதியில் சிறிய கட்டி கண்டுபிடிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

பின்னர் கங்குலி தனது வீரர்கள் தங்கியுள்ள இடத்திற்குத் திரும்பியுள்ளார். கங்குலி நலமுடன் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் கூறியுள்ளன.



# தமிழர்களின் ஒருமித்த உணர்வை உலகிற்கு பொங்குதமிழ் புரியவைத்தது

## புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(செட்டிக்குளம்)

தமிழருடைய பலத்தையும் ஒருமித்த உணர்வையும் ஆட்சியாளருக்கும் உலகத்திற்கும் பொங்குதமிழ் புரியவைத்தது. இது எமது தமிழ் இனத்தை ஒரு தேசியத் தலைமையின் கீழ் ஒரே குரலாய் உறுதிபட உரக்கச்செய்தது. வரலாற்றில் இந்நிகழ்வு தமிழரின் அரசியல் வாழ்வின் முக்கிய அத்தியாயமாகும்.

"பொதுவணக்கத் தலங்களில் இருந்தும், பாடசாலை, பொதுக்கட்டடங்களில் இருந்தும், மக்களின் அன்றாட வாழ்விடங்களிலிருந்தும் இராணுவத்தை வெளியேற்றி மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவிப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இராணுவமோ இன்று 'உயர்பாதுகாப்பு வலயம்' என்ற போர்வையில் இவ்வுடன்படிக்கைக்கு முரணாகத் தம்மைப் பலப்படுத்திக்கொண்டு மக்களின் இயல்புவாழ்க்கைக்குத் தடையாக இருக்கின்றது. இதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்."

எமது நிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினரே! "எமது நிலம் எங்களுக்கு வேண்டும்."

"நாம் எங்கள் வீட்டிற்குப் போக நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போங்கள்" என்று இவ்விடத்தில் நின்று நீங்கள் கோருவதும், கோசமிடுவதும் நியாயமானதே!

இந்த மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை விலக்கிக் கொள்வது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும் தொடர்ச்சியான போரினால அழித்தொழிக்கப்பட்ட மக்களின் வாழ்வியற் கட்டுமானங்களை மீள அமைத்துக் கொள்வதற்கு சர்வதேசம் வழங்கிய பெருமளவு உதவிகளைப் பெற்று பயன்பெற முடியாத நிலையில் எமது மக்கள் உள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முதன்முறையாக முன்வைக்கவுள்ள தீர்வை அரசு ஏற்றுமதிப்பளித்து நடைமுறைப்படுத்துமேயானால் எல்லா இன மக்களும் இந்தத் தீவில் சமத்துவமாக வாழமுடியும்.

இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு செயற்படுத்த விரும்பாத பட்சத்தில் எதிர்காலத்தில் இதற்காக வெட்கித் தலைகுனிய நேரும் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஒன்றுபட்ட தமிழர்களின் தீர்மானமே தமிழர்களின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும். மண் மீது நீங்கள் கொண்டுள்ள உறுதிமிக்க பற்று தேசியத் தலைவர் மீது கொண்டுள்ள அதீத நம்பிக்கை தன்மான உணர்வின் வெளிப்பாடு, விடாமுயற்சி, போன்றனவே எமக்கு விரைவான விடுதலையைப் பெற்றுத் தரும். நாம் எல்லோரும் எமது தேசியத்தலைமையின் கீழ் ஒன்றாக நிற்போம். உறுதியாக உழைப்போம் என வாழ்த்தி விடைபெறுகின்றேன் என்றார்.

## செயல்முறைப் பரீட்சை இன்றும் நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்டத்தில் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு நேற்றுக் காலை நடமாடும் சேவை மூலம் எழுத்துப் பரீட்சையும், செயல் முறைப்பரீட்சையும் நடைபெற்றது. இதற்கென மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் நால்வர் வருகை தந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உந்துருளி சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு 285 பேர் விண்ணப்பித் திருந்தனர். இவர்களில் ஒரு தொகுதியினருக்கு நேற்று செயல்முறைப் பரீட்சை இடம்பெற்றதுடன் மிகுதிப் பேருக்கு இன்று செயல் முறைப் பரீட்சை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள். காலை 9.00 மணிக்கு எழுத்துப் பரீட்சை இடம்பெற்ற இடத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமி வேண்டியுள்ளார்.

### ஏற்றுக்...

இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பது எனக்கு நன்கு தெரியும். நேரடிப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதில்லையென்ற நிபந்தனையை ஆறு மாத காலமாக கடைப்பிடித்து வரும் விடுதலைப் புலிகள் அதனைக் கைவிட்டால் மாத்திரமே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதியின் புனரமைப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

சமாதான நடவடிக்கைகளில் மீண்டும் பங்குபற்றுமாறு எல்.ரி.ரி.ஈ.யினருக்கு நான் மனப்பூர்வமான வேண்டுகோளை விடுக்கின்றேன். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அவர்கள் பங்குபற்றுவது மாத்திரமல்லாமல் தொடர்ந்தும் அதில் ஈடுபடுவது அவசியமாகும்.

சமஷ்டி அமைப்பு சம்பந்தமாக கனடாவிற்கு நீண்டகால அனுபவம் உள்ளது. இன, மத, மொழி என்பனவற்றினால் வேறுபட்ட மக்கள் எவ்வாறு ஒன்றிணைந்து வாழ்ந்து சுபீட்சத்தை அடையமுடியும் என்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். எனவே, இலங்கையின் நிலைமைக்குப் பொருந்திய வகையில் உருவாக்கப்படும் ஒரு வகையிலான சமஷ்டி அமைப்பு சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வாக அமையும் என்பது எனது கருத்தாகும். யாழ்ப்பாணத் தில் சிவில் சமூகத்தின் தலைவர் கள், அர்ப்பணித்து பணிபுரிவோர் ஆகியோரை நான் சந்திக்க இருக்கிறேன். உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினரின் கடமைகள், யாழ்ப்பாணம் இராணுவத் தளபதியின் சிக்கலான நிலைமை என்பன பற்றியும் ஆராய்வது எனது நோக்க மாகும்.

அதேநேரம், ஒட்டாவா பிரகடனத்தின் கொள்கைகளுக்கு விடுதலைப்புலிகளும் உத்தியோகபூர்வமாக அர்ப்பணித்துச் செயற்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

### அரசியல்...

யில் அர்ப்பணிப்புடன் ஆக்கபூர்வமாகவும் பங்குபற்றி வருகின்றனர். போதுமான அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதன் மூலம் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையை நிரந்தரத் தீர்வு ஒன்றிற்கு இட்டுச் செல்லும் அரிய வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் இந்தக் கட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம் தேவை என்றும் இந்திய அமைச்சருக்கு சம்பந்தன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றைக் காணுவதற்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பு பலனளிக்கக் கூடியதாக அமைவதற்கு இந்தியாவின் ஆதரவு தேவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

### இயல்பு...

முடுக்கெல்லாம் பொங்கு தமிழர்களாய் திரண்டெழுந்து அணி திரண்டுள்ளனர். நாம் இந்த உலகத்திற்கு ஒரு செய்தியைப் பிரகடனப்படுத்துகின்றோம். இனியும் எம்மால் இழு பட முடியாது. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும். இராணு வத்தினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் செல்லுங்கள். நமது இயல்பு வாழ்க்கையை நாம் கட்டியெழுப்ப வசதியாகப் போதிய அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று வேண்டும் நிலம்நீதி, காவல்துறை நிதி போன்ற அதிகாரங்கள் முறையாக அடக்கப்பட்ட இடைக்கால அரசை இலங்கை அரசு ஏக பிரதிநிதிகளாய் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் நாம் சொல்லுகின்ற இத்தகைய அதிகாரங்களுக்குக் குறைவான எந்தவொரு இடைக்கால கட்டமைப்பையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தமிழ் பேசும் மக்களாகிய எங்களுடைய விருப்பமான இந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரித்து இலங்கை அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். வடக்கும் கிழக்கும் தமிழரது தமிழ் பேசும் பாரம்பரியங்கள். இங்கிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும். மக்கள் செயல் முனைப்புடன் சமாதான நடைமுறையில் பங்கு கொள்ளும் அச்சமற்ற சூழல் அப்போது தான் தோன்ற முடியும். அத்தகைய தொரு சூழ்நிலையில் தமிழ்பேசும் மக்களது அபிலாசைகளான தனித் தேசிய இனம் மரபுவழித் தாயக சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு காண்பதன் ஊடாகவே நிரந்தர சமாதானம் சாத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கின்றோம். நாம் எல்லோரும் ஒரு வயிற்று மைந்தர். நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

### காவலரணை...

வருகையில் யாழ்.பருத்தித்துறை வீதியில் நெல்லியடியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவ முகாம் என்பவற்றிற்கு முன்னதாக ஈ.பி.டி.பி அமைப்பினரின் அலுவலகமும் அமைந்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் அவ் அலுவலகம் மீது இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து அலுவலகத்திற்குப் படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். அதற்கேதுவாக வீதியோரமாக நுழைவாயில் பகுதியில் இராணுவ காப்பரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாவகச்சேரியிலிருந்து சுற்றுலாவாகப் பொது மக்களை ஏற்றி வந்த மினிபஸ் எதிரே வந்த மற்றோர் வாகனத்திற்கு வழிவிடுமுகமாகக் கரை ஒதுங்கியுள்ளது. ஆயினும் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் குறித்த காப்பரணை இடித்து மோதியுள்ளது.

இதனால் முற்றாகக் காப்பரண் நிர்மூலமான நிலையில் அதனுள் கடமையில் இருந்த இரு படைச் சிப்பாய்களும் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த இரு படையினரும் உடனடியாக அப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுப் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (27)

### சிறுகதை...

அண்மையில் மேற்படி பாடசாலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்கள் மேற்படி மாணவிக்குப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். மேலும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜய மொன்றினை மேற்கொண்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர் மகாலிங்கத்தினால் இம்மாணவி பாராட்டப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### மாம்பழ...

இவ்விபத்துச் சம்பவத்தையடுத்து அப்பகுதிகளில் பெருமளவிலான பொதுமக்கள் வீதியில் குவிந்தனர். அதையடுத்து அப்பகுதிக்கு பெருமளவிலான கலகம் அடக்கும் பொலிசாரும் படையினரும் குவிக்கப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த யாழ்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து சுமுகநிலை ஏற்பட்டது. (27)

### படையினரதும்...

மன்னார் புனித சேவியர் கல்லூரி ஆகிய மூன்று முனைகளிலிருந்து ஆரம்பமான பொங்குதமிழ் பேரணியின் முன்னே மக்கள் தேசியத் தலைவரின் பிரமாண்டமான வர்ண உருவப் படத்தைத் தாங்கியபடி நகர்ந்து செல்ல அதன் பின்னே தேசியத் தலைவரின் சிறியளவிலான உருவப்படங்களைத் தாங்கியவாறு மன்னார் பொதுமைதானத்தைப் பேரணிகள் வந்தடைந்ததும் பொங்குதமிழ் சுடரினை மாவீரர் வீரவேங்கை அன்சாரின் தந்தையார் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை வீரவேங்கை புலோவின் தந்தையாரும் ஓய்வு பெற்ற அதிபருமான மரியாம்பிள்ளையும் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்காற்றுகை நடைபெற்றது.

அரங்காற்றுகையின் நடுவில் பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அரங்க நிகழ்வுகள் மன்னார் மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தறீகன் தலைமையில் நடைபெற்றன.

சிறப்புரைகளை அமைச்சர் சந்திரசேகரன், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி பொங்குதமிழ் நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### திருக்...

மையில் ஆறு பேரும் கலந்து கொண்டனர்.

ஊடகவியாளர்களுக்கு கருத்து தெரிவித்த கௌசல்யன் திருக்கோவில் வைத்தியசாலையில் ஒரு பகுதியில் இருக்கும் விசேட அதிரடிப்படையினரையும் விசேட அதிரடிப்படை முகாமையும் மிக விரைவில் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்ய இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவித்தார். இரு தரப்பிற்கும் இடையிலான கூட்டம் அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறும் என்றும் முடிவு செய்யப்பட்டது எனக் கூறினார்.

இதேவேளை, திருக்கோவில் பாவத்தை எனும் இடத்தில் அமைக்கப்படும் கட்டடம் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை தலைமைச் செயலகம் என்று மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.


## 8ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில்
30
03
1978



தாயக மண்ணில்
18
10
1995

வீரவேங்கை ஈழவேந்தன் (அதிரவன்)

ஆனந்தராசா யுவராஜ்
உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி

புலியாய் நீ சென்று புத்துணர்ச்சி
காட்டிச் சென்றாய்.
சூரியக் கதிருள்ளே
வித்தான முத்துக் கதிரே
உன் கதிர் எந்நாளும்
ஒழிவிட்டே தெரியுதடா.

இந்நாளில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம். 18-10-2003 நாளை உதயநகர் கிழக்குத் துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆத்மசாந்தி பூசை நடைபெறும் என்பதைப் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனந்தராசா அப்பா, அம்மா,
அத்தான்-விஜியன்
அக்கா-ராதா

(சி-8657)



## கண்ணீர் வணக்கம்

எமது உடன் உறையுள் பணியாளர் செல்வி.கணபதிப்பிள்ளை அனுசமலர் அவர்களின் தந்தையார்,

அமரர்
திரு.கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி அவருக்கு எமது கண்ணீர் வணக்கங்களையும், அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
தமிழீழ வைப்பகம்

(சி-8658)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.